# Mythological Elements in Bhakti Literature: A Study Based on Āṇḍāl's Tiruppāvai

**Miss. V. Mugunthini**
*Assitant Lecturer, Department of Tamil*
*University of Jaffna, Srilanka*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜனவரி

வருடம்: 2026

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.18358334

**Abstract**

*The Bhakti movement in Tamil literature, founded upon the devotional hymns of the Nayanmars and Alwars, employed mythological narratives as a vital medium for articulating and disseminating religious philosophy. Both Saivism and Vaishnavism strategically utilized myths to reinforce doctrinal principles and to cultivate devotional fervor, particularly during the Pallava period when Bhakti literature flourished. In their efforts to revive Saivism from competing religious traditions, and to enhance devotional sentiment while revealing theological truths, the Nayanmars and Alwars integrated numerous mythological concepts into their works. Within this tradition, Andal—the sole female among the twelve Alwars—composed two significant texts, Nachiyar Thirumozhi and Thiruppavai. In Thiruppavai, Andal discusses the ritual of Paavai Nombu while simultaneously exalting Krishna, weaving into her verses multiple mythological references to his greatness. This study examines the myths articulated in Thiruppavai, employing explanatory and historical methodologies. The primary sources for this research are Thiruppavai itself and its traditional commentaries.*

***Keywords :*** *Avatar, Andal, Krishna, Thiruppavai, Myth*

**References**

# பக்தி இலக்கியங்களில் தொன்மங்கள் : ஆண்டாளின் திருப்பாவையை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

***செல்வி. வை. முகுந்தினி***
உதவி விரிவுரையாளர், தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

***ஆய்வுச்சுருக்கம்***
*மதம் சார்ந்த ஒரு இயக்கமாகத் தோன்றிய பக்தி இயக்கத்தின் அடிப்படையாக நாயன்மார்கள் மற்றும் ஆழ்வார்கள் பாடிய பாடல்கள் அமைந்தன. சைவம் மற்றும் வைணவ சமயங்கள் தமது மதம் சார்ந்த கொள்கை களைப் பரப்புவதற்கான கருவியாகத் தொன்மங்களைப் பயன்படுத்தினர். பல்லவர் காலத்தில் மிகுதியாகத் தொன்மங்கள் பயிலப்பட்டு வந்துள்ளமையினை பக்தி இலக்கியங்களினூடே அவதானிக்க முடிகின்றது. ஏனைய மதங்களிடமிருந்து சைவத்தை மீட்டெடுக்கவும் பக்தியுணர்வை மேம்படுத்தவும் இறையியல் உண் மைகளை வெளிக்கொணரவும் நாயன்மார்களும் ஆழ்வார்களும் தமது இலக்கியங்களில் தொன்மக் கருத்து க்கள் பலவற்றை எடுத்தாண்டனர். அந்தவகையில் பன்னிரு ஆழ்வார்களுள் ஓரேயொரு பெண் ஆழ்வாராகிய ஆண்டாள் நாச்சியார் திருமொழி, திருப்பாவை ஆகிய இரண்டு பனுவல்களை யாத்துள்ளார். ஆண்டாள் தன்னுடைய திருப்பாவையில் பாவைநோன்பு குறித்துப் பேசும் அதேவேளை கண்ணனின் பெருமை பேசும் முகமாக கண்ணன் குறித்த பல தொன்மங்களை எடுத்தாள்கிறார். அந்தவகையில் இந்த ஆய்வானது திருப்பாவையில் காணலாகும் தொன்மங்கள் குறித்து ஆராய்வதாக அமைகின்றது. விளக்கமுறை மற்றும் வரலாற்றியல் ஆய்வு ஆகிய ஆய்வு முறையியல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் இந்த ஆய்வில் திருப்பாவை, அதற்கான உரை விளக்கங்கள் என்பன முதனிலைத் தரவுகளாக அமைகின்றன.*
***திறவுச்சொற்கள் :*** *அவதாரம், ஆண்டாள், கண்ணன், திருப்பாவை, தொன்மம்*

## அறிமுகம்

ஸ்ரீவில்லிபுத்தூரில் வாழ்ந்துவந்த பெரியாழ்வார் மலர்வனம் அமைத்து அதில் மலரும் மலர்களை மாலையாக்கி ஸ்ரீவில்லிபுத்தூரில் திருக்கோயில் கொண்டுள்ள இறைவனுக்கு அணிவித்து திருத்தொண்டாற்றி வந்தார். ஒருநாள் பெரியாழ்வாரின் நந்தவனத்தில் ஒரு பெண் குழந்தை கிடக்க, அதை எடுத்துவந்து கோதை எனப் பெயரிட்டு வளர்த்தார். இவ்வாறு பெரியாழ்வாரிடத்தில் வளர்ந்த கோதையாகிய ஆண்டாள் கண்ணன் மீது அதீத பக்தி கொண்டிருந்தாள். கண்ணன் மீது அவள் கொண்ட பக்தியும் காதலுமே ஆண்டாள் நாச்சியார் திருமொழி, திருப்பாவை ஆகிய பாடற்றொகுதிகளை இயற்றியமைக்குக் காரணம். அந்தவகையில் ஆண்டாள் பாடிய திருப்பாவை முப்பது பாடல்களைக் கொண்டமைந்துள்ளது. திருப்பாவையின் முதற் பாசுரம், இரண்டாம் பாசுரங்கள் முறையே பாவை நோன்பு நோற்கவேண்டிய காலத்தினையும் நோன்பின் போது கடைபிடிக்கவேண்டிய விடயங்களையும் குறிப்பிடுகின்றன. மூன்றாம் பாசுரம் பாவைநோன்பு நோற்பதனால் கிடைக்கும் பயன்களை எடுத்துக்காட்டுகிறது. உலகிலுள்ளோர் வாழ்வதற்கு இன்றியமையாததாக விளங்குகின்ற, நீரை வழங்கும் மழைக்கடவுளை வேண்டுவதாக நான்காம் பாசுரம் அமைகின்றது. தொடர்ந்து வரும் பாசுரங்கள் இல்லங்களில் துயின்று கொண்டிருக்கும் பெண்களை எழுப்புவதாக அமைவதோடு இடையிடையே கண்ணனின் வரலாறுகளும் எடுத்துக்காட்டப்படுகின்றன. முப்பது பாசுரங்களும் எம்பாவாய் என்ற பாடல் முடிப்பைக் கொண்டு அமைந்துள்ளதோடு முப்பதாவது பாடல் திருப்பாவையைப் பாராயணம் செய்வதால் உண்டாகும் நற்பயன்களை பதிகப் பயனாக உரைக்கிறது.

**தொன்மம்**

தொன்மம் என்ற சொல்லுக்கு பழமை என்பது பொருள். தொன்மை என்பது ஆங்கிலத்தில் 'Myth' என்று அழைக்கப்படுகிறது. தொன்மம் என்பது பண்டைய மக்களின் பழக்கவழக்கங்கள், வரலாற்று நிகழ்வுகள் என்பவற்றைக் குறிக்கும் ஒரு சொல்லெனக் கொள்ளலாம். தொன்மங்கள் கடவுள், அவதாரங்கள் மற்றும் கடவுளின் வீரச் செயல்கள் குறித்த கருத்தியலாக மட்டுமன்றி சமய உண்மைகளை, பௌதிக சிந்தனைகளை அறிந்து கொள்ளவும் உதவிபுரிகின்றன. தொன்மை என்பது குறித்துத் தொல்காப்பியர்,

**தொன்மை தானே சொல்லுங் காலை**
**உரையொடு புணர்ந்த பழமை மேற்றே**
***(தொல். செய்யுளியல்:229)***

என்ற நூற்பாவில் சுட்டிக்காட்டுகிறார். இச்சூத்திரத்திற்கு இளம்பூரணர், 'தொன்மையாவது உரையோடு பொருந்திப் போந்த பழமைதாகிய பொருள்மேல் வருவன. அவை இராம சரிதமும் பாண்டவ சரிதமும் முதலாகியவற்றின் மேல்வருஞ் செய்யுள்' என்று உரைகூறியுள்ளார். இதிலிருந்து தொல்காப்பியர் தொன்மை என்ற சொல்லால் புராணத்தையே குறிப்பிட்டார் என்பது தெளிவாகின்றது. ஆண்டாள், மகாபாரதத்தில் இடம்பெற்ற கண்ணன் தொடர்பான சில தொன்மங்களை திருப்பாவையில் அடையாளப்படுத்துகிறார். அந்தவகையில் திருப்பாவையில் காணலாகும் தொன்மங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தி நோக்கலாம்.

**கண்ணனுடைய பிறப்பு மற்றும் வளர்ப்பு வரலாறு**

தன்னுடைய தங்கை தேவகிக்கும் வசுதேவருக்கும் திருமணம் செய்துவைத்த கம்சன் அவர்களை வீட்டிற்கு அழைத்துச் செல்லும்போது உன் தங்கையின் வயிற்றில் பிறக்கும் எட்டாவது குழந்தையால் உனக்கு மரணம் ஏற்படும் என்று அசரீரி கூறியதால் தன் தங்கையென்றும் பாராமல் தேவகியையும் அவளது கணவனான வசுதேவரையும் கம்சன் சிறையிலடைத்தான். சிறையில் பிறந்த ஒவ்வொரு குழந்தையையும் கருணையின்றிக் கொன்ற கம்சனிடத்திலிருந்து எப்படியாவது தன் குழந்தைகளை காப்பாற்ற வேண்டுமென்று முயற்சி செய்தபோதிலும் இருவரும் அதில் தோல்வியையே சந்தித்தனர். இவ்வாறு ஏழு குழந்தைகளைக் கொன்ற கம்சன் எட்டாவது குழந்தையைக் கொல்வதற்காகக் காத்திருந்தான். ஒருநாள் நள்ளிரவில் கடும்மழை பெய்து கொண்டிருந்த போது கிருஷ்ண பகவான் பிறந்தார். எப்படியாவது தன் எட்டாவது குழந்தையைக் காப்பாற்றவேண்டும் என்ற நோக்குடன் வசுதேவர் தம் குழந்தையை ஒரு கூடையில் வைத்துக் கோகுலம் சென்று அங்கே நந்தகோபன் மற்றும் தேவகியிடம் குழந்தையைக் கொடுத்துவிட்டு அவர்களுக்குப் பிறந்த பெண்குழந்தையை எடுத்துக்கொண்டு மீண்டும் சிறைக்குத் திரும்புகிறார். இவ்வாறு கண்ணன் மதுராவிலே பிறந்து ஆயர்பாடியில் வளர்ந்த வரலாற்றை ஆண்டாள் தன்னுடைய திருப்பாவையில்

***ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓர் இரவில்***
***ஒருத்தி மகனாய் ஒழித்து வளர (திருப்பாவை. 25:1-2) என்று எடுத்துக்காட்டுகிறார்.***

**கண்ணனைக் கொல்ல கம்சன் மேற்கொண்ட உபாயங்கள்**

கண்ணன் கோகுலத்தில் வளர்வதைக் கேள்வியுற்ற கம்சன் அவனைக் கொல்வதற்காகப் பல அரக்கர்களை ஏவுகின்றான். அவர்களுள் பூதகி என்ற பேய்மகளும் ஒருத்தி. ஒரு குழந்தை உயிர் வாழ்வதற்கு ஆதாரமாக அமைவது தாய்ப்பால் தான். ஆனால் பூதகி தன்னுடைய முலையில் நஞ்சைப் பூசி கண்ணனுக்குப் பாலூட்ட, அவதாரக் கடவுளான கண்ணன் அதனை உணர்ந்தவனாக அவளது முலையில் வாய்வைத்துப் பால் குடிப்பதுபோலப் பாவனை செய்து அவளுடைய உயிரைப் பறித்தான். இது போன்று சக்கரவடிவில் வந்த சகடாசுரனை, சகடம் கட்டுக்குலையும்வகையில் காலால் உதைத்தழித்தான். கண்ணனின் இத்தகைய திருவிளையாடல்களை ஆண்டாள், பேய்

முலை நஞ்சு உண்டு, கள்ளச்சகடம் கலக்கழியக் காலோச்சி பொன்றச் சகடம் உதைத்தாய் (திருப்பாவை. 06:3-4) என்ற அடிகளில் ஆண்டாள் எடுத்துக்காட்டியுள்ளார். கண்ணனைக் கொல்வதற்கு கம்சன் தீட்டிய சூழ்ச்சிகள் எதுவும் நிறைவேறாமல் போனபோதும் தன் முயற்சியைக் கைவிடாது தொடர்கிறான். கம்சனின் கட்டளையை நிறைவேற்றுவதற்காக குதிரை வடிவில் வந்த கேசி என்ற அரக்கனின் வாயினைப் பிளந்து துவம்சம் செய்ததோடு தன்னை எதிர்த்துவந்த பிறமல்லர்களையும் அழித்தான். இத் தீரச்செயல் மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய தேவாதி தேவன் (திருப்பாவை. 08: 6-7) என்ற வரிகளிலும் பகாசுரன் என்னும் அரக்கன் பறவை வடிவம் கொண்டு கண்ணனை அழிக்க நெருங்கியபோது கண்ணன் அவனுடைய வாயினைப் பிளந்து அவனை வதம்செய்தான் என்பதை புள்ளின் வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக் கிள்ளிக் களைந்தானை (திருப்பாவை.13:1-2) என்ற வரிகளிலும் எடுத்துக்கூறியுள்ளார். மேலும் குவல்யா பீடம் என்ற மதம் பொருந்திய யானை கண்ணனைக் கொல்லமுற்பட்டபோது அந்த யானையின் மதம் நீக்கி அதனை அழித்தான் என்ற செய்தியை வல் ஆனை கொன்றானை மாற்றாரை மாற்று அழிக்க வல்லானை (திருப்பாவை. 15:7-8) என்ற பாடலில் எடுத்தியம்பியுள்ளார். கன்று உருவில் வந்த வத்ஷாசுரனை எறிதடியாகப் பாவித்து விளாமர வடிவில் வந்த கபித்தாசுரன் மேல் வீசியெறிந்து இருவரையும் ஒரேநேரத்தில் அழித்தான் என்பதை கன்று குணிலா எறிந்தாய் (திருப்பாவை. 24:4) என்ற அடிகளில் ஆண்டாள் பதிவு செய்திருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## அவதாரச் சிறப்பு

தீயவற்றை அழித்தல், நல்லவற்றைக் காத்தல், அறத்தை நிலைநிறுத்தல் என்ற மூன்று நோக்கங்களுக்காக திருமால் மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனம், பரசுராமன், பலராமன், இராமன், கிருஷ்ணன், கல்கி என்ற பத்து அவதாரங்களை எடுத்தார். அவற்றுள் வாமனன், கண்ணன், இராமன் என்ற மூன்று அவதாரங்கள் குறித்து திருப்பாவையில் பேசுகின்றார் ஆண்டாள். கண்ணன் அவதாரத்தினூடாக கண்ணனின் பிறப்பு, கம்சனால் ஏவப்பட்ட அரக்கர்கள், அவர்களை மாய்க்க கண்ணன் மேற்கொண்ட செயல்கள், கோவர்த்தனகிரி மலையைக் குடையாகப் பிடித்தமை போன்ற பல செய்திகளைக் கூறிய ஆண்டாள் வாமன அவதாரத்தினூடாக திருமால் உலகளந்ததைக் கூறுகின்றார். அசுர அரசர்களிலேயே அதிக வலிமை பெற்றவனான பக்த பிரகலாதனின் வம்சத்தைச் சேர்ந்த மகாபலி சக்கரவர்த்தி, தீவிர விஷ்ணு பக்தன். அவன் தனது வலிமையால் மூவுலகங்களையும் அடக்கி ஆட்சிபுரிந்து வந்தான். அவனது செயற்பாடுகளைத் தட்டிக் கேட்கமுடியாத தேவர்கள் அச்சம்மேலிட விஷ்ணுவைச் சரணடைந்தார்கள். அதன்பின் அவன் உலகை வெல்ல யாகம் ஒன்று நடத்தத் திட்டமிட்டபோது தேவர்களின் வேண்டுதலை மனதிற்கொண்டு அவனது மமதையை அடக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் விஷ்ணு திருவிக்கிரமன் வடிவெடுத்து யாகம் நிகழுமிடத்திற்கு வந்து மூன்றடி நிலம் கேட்டார். வாமனன் கேட்ட மூன்றடி நிலத்தைத் தருவதாக மகாபலி ஒப்புக்கொண்டான். அதன் பிரகாரம் வாமனன், மண்ணுலகை ஒரு அடியாலும் விண்ணுலகை மறு அடியாலும் அளந்துவிட்டு இன்னொரு அடி எங்கேயென்று வினாவ வாமனனாக வந்திருப்பது யாரெனத் தெரிந்துகொண்ட மகாபலி ஆணவம் நீங்கப் பெற்றவனாக இன்னொரு அடி இதோ என்று தனது தலையைக் காண்பித்தான். கண்ணன் வாமன அவதாரம் எடுத்தற்கான பின்னணியை, ஓங்கி உலகு அளந்த உத்தமன் பேர்பாடி (திருப்பாவை. 03:1), அன்று இவ் உலகம் அளந்தாய்! (திருப்பாவை. 24:1) என்றும் பாடுகிறார் ஆண்டாள்.

**இராம அவதாரம்**

இராம அவதாரமெடுத்து இராமன் தென்னிலங்கையில் மேற்கொண்ட போர் குறித்த செய்தி திருப்பாவையில பாடப்பட்டுள்ளது. விஷ்ணு, தசரனுக்கும் கோசலைக்கும் மகனாக அவதரித்ததே இராம அவதாரமாகும். பதினான்காண்டுகள் காடாளவேண்டுமென்று உரைத்த தந்தையின் வாக்கிற்கேற்ப இராமன் காட்டிற்குச் செல்கிறான். அவ்வாறு வனத்தில் வசிக்கும் போது ஒருநாள் இராவணன் அவனுடைய புஷ்பக விமானத்தில் சீதையைச் சிறைபிடித்துவந்து அசோகவனத்தில் வைத் திருந்தான். சீதையைக் காப்பாற்ற பல வழிகளிலும் முயன்ற இராமன் இறுதியாக இராவணனோடு போர்செய்து அவனை அழித்தபின்னர் சீதையை அங்கிருந்து மீட்கிறார். இவ்வாறு தன்னுடைய திருவடிகளால் தென்னிலங்கைக்கு நடந்து சென்று அங்கு இராவணனையும் பிற அரக்கர்களையும் இராமன் அழித்ததை ஆண்டாள், சென்று அங்குத் தென்னிலங்கை செற்றாய் (திருப்பாவை. 24:2), சினத்தினால் தென் இலங்கைக் கோமானைச் செற்ற (திருப்பாவை. 12) என்ற வரிகளில் எடுத்தாள்கிறார்.

**உயிர்களைக் காக்கும் அருட்திறன்**

உலகத்து மக்கள் கண்ணனை விரும்பி வழிபடுவதைக் கண்ட தேவாதிபதியும் மழைக்கடவுளுமான இந்திரன், அவர்கள்தன்னை வணங்காமையால் பொறாமை கொள்கிறான். எனவே இடைவிடாது பெருமழை பொழிந்து உயிர்களைத் துன்புறுத்தினான். துன்பங்கள் எவற்றையும் மேற்கொள்ளாமல் உயிர்கள் வீணே அல்லற்படுவதைக் கண்ணுற்ற கண்ணன் கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்து மக்களைக் காத்தான். கண்ணனின் இத்தகைய அருட்திறத்தை மெச்சும்வகையில் ஆண்டாள், குன்று குடையாய் எடுத்தாய் குணம் போற்றி (திருப்பாவை. 24:5) என்கிறார்.

**கண்ணனின் தோற்றப்பொலிவு**

கண்ணனின் தோற்றப்பொலிவினை ஆண்டாள், திருப்பாவையின் பல பாடல்களில் எடுத்துக்காட்டியுள்ளார். அழகு நிறைந்த கண்களை உடையவன், நறுமணமுடைய திருத்துழாயை முடியில் அணிந்துள்ளவன், சங்கு சக்கரம் ஏந்திய பெரிய கைகளை உடையவன், நாற்றத்துழாய் முடி நாராயணன் (திருப்பாவை. 10:3) சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையான் (திருப்பாவை. 14:7), கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல முகத்தான் (திருப்பாவை. 01:6), முகில் வண்ணன் (திருப்பாவை. 11:6)

**கண்ணனின் உறவுகள்**

திருப்பாவையின்; இருபத்தைந்தாவது பாடலில் தேவகியின் வயிற்றிலே மகனாகப் பிறந்து நந்தகோபன் திருமாளிகையில் யசோதை என்ற மற்றொரு தாயிடம் வளர்ந்தான் என்று கூறப்படுவதிலிருந்து தேவகி, கண்ணனின் தாயென்பதும்

**கூர்வேல் கொடும் தொழிலன் நந்தகோபன் குமரன்**
**ஏர் ஆர்ந்த கண்ணி யசோதை இளம் சிங்கம்**
**(திருப்பாவை. 01:4-5)**

என்பதிலிருந்து நந்தகோபன் மற்றும் யசோதை ஆகியோர் வளர்ப்புப் பெற்றோர் என்பதும் தெளிவாகிறது. கண்ணன் பலதேவனின் தம்பி என்பதனை

**----------------------------- பலதேவா**
**உம்பியும் நீயும் உறங்கேல்**
**(திருப்பாவை. 17:7-8)**

என்ற வரிகளில் உறுதிப்படுத்துகிறார்.

**செப்பு அன்ன மென்முலைச் செவ்வாய்ச் சிறு மருங்குல்**
**நப்பின்னை நங்காய்! திருவே துயில் எழாய்**
**உக்கமும் தட்டொளியும் தந்து உன் மணாளனை**
**(திருப்பாவை. 20:5-6)**

என்ற அடிகளில் நப்பின்னையின் கணவன், கண்ணன் என்றுரைக்கிறார். கம்சன், கண்ணனின் மாமன். ஆண்டாள் இருபத்தைந்தாவது பாடலில் கஞ்சன் என்ற சொல்லைப் பயன்படுத்தியிருப்பினும்

*கண்ணனின் மாமா கம்சன் என்பதை திருப்பாவையின் எந்தவொரு பாடலிலும் எடுத்துக் காட்டவில்லை.*

### கண்ணனின் இதர சிறப்புகள்

*மாயச் செயல்கள் புரிவதில் தேர்ச்சி பெற்றவன், யமுனை ஆற்றிலே துறையுடையவன், இடையர் குலத்தில் தோன்றிய மங்கள விளக்கு, தேவகியின் வயிற்றுக்கு மேன்மை உண்டாக்கியவன், ஆதிசேடன் மேல் துயில்கின்றவன், ஆழம்மிக்க பரந்த கடலை ஆட்கொள்ளும் ஆற்றல் வாய்ந்தவன் எனப் பலவாறாக கண்ணனுடைய மகிமைகளை எடுத்து ரைக்கிறார் ஆண்டாள். கண்ணனின் இத்தகைய சிறப்புகளை,*

***மாயனை மன்னும் வடமதுரை மைந்தனைத்***
***தூயபெருநீர் யமுனைத் துறைவனை***
***ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கைத்***
***தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனை***
***(திருப்பாவை. 05:1-4),***
***வெள்ளத்து அரவில் துயில் அமர்ந்த வித்தினை***
***(திருப்பாவை. 06:5)***
***பால்கடலுள் பையத் துயின்ற பரமன்***
***(திருப்பாவை. 02:2-3),***
***ஆழிமழைக் கண்ணா (திருப்பாவை. 04:1)***

*ஆகிய வரிகளால் அறியலாம்.*

### கண்ணனின் மறு பெயர்கள்

*நாராயணன், மாயன், கேசவன், வைகுந்தன், மணிவண்ணன், நெடுமால், கோவிந்தா, மாதவன், திருமால் என்பவற்றை கண்ணனுக்குரிய மறுபெயர்களாக எடுத்தாள்கிறார். அதாவது கண்ணனுடைய பெருமைகள், அவனுடைய வீரதீரச் செயல்கள் எடுத்துக்கூறுமிடத்தும்கண்ணனிடம்தம்வேண்டுதலை முன்வைத்தல், தோழியரைத் துயில் எழுப்புதல் என்பவற்றின்போதும் ஆண்டாள் கண்ணனுடைய பிற நாமங்களைப் பயன்படுத்தியுள்ளார்.*

### முடிவுரை

*பக்தி இலக்கியங்களில் தொன்மங்கள் மிகுதியான அளவில் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆண்டாள் பாடிய திருப்பாவையில் திருமால் குறித்த தொன்மங்கள் அதிகமாக எடுத்தாளப்பட்டுள்ளன. பாவைநோன்பு நோற்கும் தோழிகளைத் துயிலெழுப்புவதற்கு தொன்மங்களை ஒரு உத்தியாகக் கைக்கொண்டிருக்கிறார். பாவைநோன்பின் மகிமைகளையும் சிறப்புகளையும்அதன்பயனையும்விளக்கும்முகமாக ஆண்டாள், கண்ணன் குறித்த தொன்மங்களைக் கையாண்டிருக்கிறார். அந்தவகையில் ஆண்டாள் கண்ணனின் திருவிளையாடல்கள், அவனுடைய அவதார நோக்கங்கள், கண்ணனின் பிறப்பு மற்றும் இறப்பு வரலாறுகள், அவனுடைய தோற்றப்பொலிவு என்பவற்றை திருப்பாவைக்கூடாக நயம்பட எடுத்துரைத்துள்ளார். ஆண்டாள் மகாபாரத இதிகாசத்தில் வருகின்ற கண்ணன் குறித்த தொன்மங்களைத் திருப்பாவையில் எடுத்துக் காட்டியுள்ள திறம் விதந்து போற்றுதற்குரியது.*

### உசாத்துணை நூல்கள்


1. *பார்த்தசாரதி.ஆர்., (2000), திருப்பாவை திருவெம்பாவை - பாட்டும் கருத்தும், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை.*
2. *கண்ணப்ப முதலியார், (1954), திருவெம்பாவை திருப்பாவை திருப்பள்ளி எழுச்சி மூலமும் விளக்க உரையும், இந்நூல்களைப்பற்றிய ஆராய்ச்சிக்கட்டுரைகளும், விசாகப் பதிப்பகம், சென்னை.*
3. *பஞ்சாங்கம்.க., (2005), தொன்மத் திறனாய்வு, அன்னம் - அகரம் வெளியீடு*